**R 3277**

## “அவருடைய கிருபையின் வெற்றி எவ்வளவு மகத்தானது?”

**WHAT A TRIUMPH OF HIS GRACE IT WILL BE**

அவரது கிருபையின் வெற்றி எத்துணை மகத்துவமானது ?

என்னையும்கூட அவர் தமது வீட்டினிலே கொண்டுசெல்லும் போதினிலே,

தாழ்வின் சமவெளியினின்றே என்னைத் தூக்கி எடுத்தே

ஞானிகளின் மாபெரும் சத்தியவான்களின் ஊடே என்னை நடத்திச் சென்றாரே!

எனவே தான், அவரது கிருபையின் வெற்றியின் மகத்துவம் தான் என்ன!

இறுதியிலே, விசுவாசப் பாதையிலே என்னை அவர் காப்பாற்றி மீட்டெடுத்தாரே,

அவர்தானே விசுவாசத்தின் அடையாளம், வேலை ஆரம்பமாகிவிட்டதே,

அது முடியும் வரையினில் என்னை அவர் கவனித்து வருகின்றாரே,

அவருடைய கிருபையின் வெற்றியின் மகத்துவம் எத்துணை பெரியது!

அவருடைய கிருபையின் வெற்றி எத்துணை பெரிதானது ?

என்னுடைய சோகமான தவறுகள் எல்லாம் முடிந்துவிட்டனவே!

நான் விடுதலையாக்கப்பட்டேனே!

நன்மையை செய்வதற்காகவே விடுதலையாக்கப்பட்டேன்,

என்னுடைய பலவீனங்கள் அனைத்தும் ஒளியாகவே மாற்றப்பட்டதுவே!

அவருடைய கிருபையின் வெற்றி மகத்தானதொன்றே!

என்னையும்கூட அவர் நோக்கி, நல்லது! நன்றாகச் செய்தாய் என்று கூறிடும் போதினிலே, அவருடைய வெற்றியின் மகத்துவம் பெரிதாமே!

மகிமையிலே என்னை அவர் சொந்தமாக்கிக் கொள்ளும் போதினிலே, என்னுடன் அவரது அரியணையை பகிர்ந்துகொள்ளும் வேளையிலே,

அவருடைய வெற்றியின் மகத்துவம் எத்துணை அதிகமானதே!

---------